மாலை பதிப்பு

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள supeedsam.com

24.08.2022 புதன்கிழமை supeedsam.com supeedsam@gmail.com

## இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் கப்பல் சேவை



இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையில் உத்தேச கப்பல் சேவை இந்த ஆண்டு ஆரம்பிக்கப்படும் என புதுச்சேரி முதல்வர் என்.ரங்கசாமி தெரிவித்துள்ளார். மாநில பேரவையில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். காரைக்கால் துறைமுகத்துக்கும், காங்கேசன்துறை துறைமுகத்துக்கும் இடையே படகு சேவையை ஆரம்பிக்க இந்திய அரசாங்கம் எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை, புதுச்சேரி துறைமுகத்தில் பயணிகள் மற்றும் சரக்குக்கப்பலை இயக்குவதற்கும், பிற தொடர்புடைய 02



## ஒகஸ்ட் 30இல் இடைக்கால வரவு செலவு திட்டம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் இடைக்கால வரவு – செலவுத் திட்டம் எதிர்வரும் 30ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது. நிதி அமைச்சர் என்ற வகையில், இடைக்கால வரவு – செலவுத் திட்டத்தினை முன்வைத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றவுள்ளார். அத்துடன், இடைக்கால இடைக்கால வரவு – செலவுத் திட்டம் மீதான விவாதம் எதிர்வரும் 31ஆம் திகதி முதல் செப்டம்பர் 2ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

## கோட்டாவின் மிரிஹான வீட்டுக்கு பலத்த பாதுகாப்பு

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் மிரிஹான வீட்டுக்கான பாதுகாப்பு மேலும் பலப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த வீட்டுக்கு ஏற்கனவே பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்ட படையினரின் எண்ணிக்கையை விட, தற்போது அதிகளவான அதிரடிப் படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இன்று (24) இலங்கை திரும்புவார் என முன்னர் அறிவித்திருந்த போதிலும், அவரது வருகை இரண்டு வாரங்கள் தாமதமாகும் என்ற தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## அரச ஊழியர்களை பணிக்கு சமுகமளிக்குமாறு சுற்றறிக்கை



அரச ஊழியர்களை இன்று (புதன்கிழமை) முதல் வழமை போன்று பணிக்கு சமுகமளிக்குமாறு சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. திறைசேரியின் செயலாளர் மஹிந்த சிறிவர்தனவினால் இதுதொடர்பிலான சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இதற்கமைய அனைத்து அரச அதிகாரிகளும் இன்று முதல் வழமை போன்று கடமைக்கு சமுகமளிக்க வேண்டும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## ஊடகங்களையும் நீதித்துறையையும் விளையாட்டாகக் கருதுகின்றனர்




அரசாங்கத்தின் சில உறுப்பினர்கள் ஊடகங்களையும் நீதித்துறையையும் விளையாட்டாகக் கருதுகின்றனர் ! எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவித்தார். அரசாங்கத்தின் அமைச்சர்கள் ஜனநாயகத்தின் பெயரால் ஊடகங்களையும் நீதித்துறையையும் விளையாட்டாகக் கருதுவதாகவும், சில பாராளுமன்ற உறுப்பினர்கள் நீதித்துறையை கடுமையாக அவமதிப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். ரஞ்சன் ராமநாயக்கவுக்கு ஒரு சட்டமும், அரசாங்கத்தில் உள்ள சிலருக்கு வேறு சட்டமும் நடைமுறைப்படுத்தப்படுவதாகத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், நீதித்துறை மற்றும் ஊடகங்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படும் இந்த அவமதிப்பு அச்சுறுத்தல்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார். அரசாங்கத்தின் ஜனநாயக விரோத ஒடுக்குமுறைக்கு எதிராக 02



## வெளிநாடு செல்வோர் விரைவில் தமது கடவுச்சீட்டை பெற்றுக்கொள்ள விசேட கருமபீடம்

தொழிலுக்காக வெளிநாடு செல்வோர் விரைவில் தமது கடவுச்சீட்டை பெற்றுக்கொள்ள வசதியாக குடிவரவு திணைக்களத்தில் விசேட கருமபீடம் திறக்கப்பட்டுள்ளது. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகளுடன் கடந்த வாரம் இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்து இந்த விசேட விசேட கருமபீடத்தை திறப்பதற்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார அங்கீகாரம் வழங்கியிருந்தார். முன்னோடி திட்ட நடவடிக்கைகளில் இருந்து பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில், வேலைவாய்ப்புக்காக வெளிநாடு செல்ல 02

## இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் கப்பல் சேவை

நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கும் நிறுவனங்களிடமிருந்து, விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஊடகங்களையும் நீதித்துறையையும்

எதிர்க்கட்சியில் உள்ள சக்திகளை வீதிக்கு இழுக்க வேண்டாம் என கேட்டுக்கொண்ட எதிர்க்கட்சித்தலைவர், இத்தருணத்தில் நாடாளுமன்றக் குழு அமைப்பின் மூலம் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஆதரவளிப்பது பொதுமக்களை மனதில் கொண்டேயாகும் எனவும் தெரிவித்தார். அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தை இன்று (24) கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் சந்தித்ததுடன், இந்நாட்களில் முட்டைத் தொழில்துறை எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டன. அவர்களின் பிரச்சினைகள் மட்டுமன்றி பாவனையாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்தும் ஆராயப்பட்டன. சில பாராளுமன்ற உறுப்பினர்களின் நடத்தையைக் கூட கட்டுப்படுத்துமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்த எதிர்க்கட்சித் தலைவர், அவ்வாறு செயற்படாவிட்டால் அவர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

## வெளிநாடு செல்வோர் விரைவில் தமது கடவுச்சீட்டை பெற்றுக்கொள்ள விசேட கருமபீடம்

விரும்பும் அனைத்து இலங்கையர்களுக்கும் வசதியாக நேற்று முதல் இந்த விசேட கருமபீடத்தை திறக்க முடிவு செய்யப்பட்டது. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் இருந்து தமது வெளிநாட்டு தொழில்வாய்ப்பு தொடர்பான கடிதத்தைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரர்கள் அதற்கான தமது ஆரம்பச் செயற்பாடுகளை நிறைவுசெய்த பின்னர், இந்த விசேட கருமபீடத்தில் ஆவணத்தை சமர்ப்பிப்பதன் மூலம் தமது கடவுச்சீட்டை விரைவில் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஒலுவில் துறைமுகத்தை இழுத்து மூடுவதே கடலரிப்பைத் தடுப்பதற்கான ஒரே தீர்வு

**(அஸ்லம் எஸ்.மௌலானா)**

கல்முனைப் பிராந்தியத்தில் பாரியளவில் கடலரிப்பு ஏற்படுவதற்கும் கடற்றொழில் பாதிப்படைவதற்கும் முக்கிய காரணமாக அமைந்திருக்கின்ற ஒலுவில் துறைமுகத்தை, இழுத்து மூடுவதே கடலரிப்பை நிரந்தரமாகத் தடுப்பதற்கான ஒரே தீர்வாக அமையும் என்று கிழக்கிலங்கை முஸ்லிம் பேரவை தெரிவித்துள்ளது. இதனை வலியுறுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, துறைமுக அபிவிருத்தி அமைச்சர் நிமல் சிறிபால டி.சில்வா மற்றும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்டோருக்கு மகஜர் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக பேரவையின் செயலாளர் செயிட் ஆஷிப் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்

மறைந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்கள், நாட்டினதும் பிராந்தியத்தினதும் பொருளாதார அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு ஒலுவில் துறைமுக நிர்மாணத் திட்டத்தை முன்மொழிந்திருந்தாலும், குறித்த கடற்பரப்பு துறைமுக அமைப்புக்கு பொருத்தமற்றது எனவும் இதனால் மீனவர் சமூகத்தினருக்கு பெரும் பாதிப்பு ஏற்படக்கூடிய வாய்ப்புள்ளது எனவும் நிபுணத்துவ ஆய்வறிக்கை சுட்டிக்காட்டியிருந்தது. எனினும், அவை எதுவும் கருத்தில் கொள்ளப்படாமலேயே துறைமுக நிர்மாண வேலைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இதற்காக ஒலுவில் கிராமத்தில் நூற்றுக்கணக்கானோரின் குடியிருப்புக் காணிகள் சுவீகரிக்கப்பட்டிருந்தன. நீண்ட காலத்திற்கு பின்னரே இவற்றுக்கு நஷ்டஈடு வழங்கப்பட்ட போதிலும் காணிகளை இழந்தோர் எதிர்பார்த்த பெறுமதி, வழங்கப்படாமல், ஏமாற்றப்பட்டிருந்தனர். இதற்காக அவர்கள் பல வருடங்கள் போராட்டங்களை நடத்த வேண்டியிருந்தது. இத்துறைமுக நிர்மாணத்தினால் நாட்டுக்கோ பிராந்தியத்திற்கோ சமூகத்திற்கோ இதுவரை எவ்வித பயனும் கிடைக்கவில்லை. மாறாக தொடர்ந்தும் இழப்புகளையே சந்திக்க நேரிட்டுள்ளது. இதற்காக கரையோரக் கிராமங்கள் பல காவு கொடுக்கப்பட்டிருக்கிறன. மக்கள் தமது காணிகளையும் வாழ்வாதாரத்தையும் இழந்து, நிர்க்கதியடைந்திருப்பதுடன் முழுக் கல்முனைப் பிராந்தியத்தினதும் கரையோரப் பகுதிகள் பாரிய கடலரிப்புக்குள்ளாகி வருகின்றன.

காலத்திற்கு காலம் பதவிக்கு வருகின்ற அரசுகளும் துறைமுக அமைச்சர்களும் பிராந்திய அரசியல் தலைமைகளும் இப்பிரச்சினைக்கு தீர்வு வழங்க நடவடிக்கை எடுப்பதாக அறிக்கைகள் வெளியிடுவதிலும் , கள விஜயங்கள் மேற்கொள்வதிலும் காலத்தை கடத்தி வருகின்றன. எனினும் மக்களுக்கு இன்னும் தீர்வு கிடைப்பதாக இல்லை. நாளுக்கு நாள் கடலரிப்பு உக்கிரமடைந்து வருகிறது. இதனை வர்த்தக துறைமுகமாக இயக்க முடியாது எனத் தெரிவித்து, மீன்பிடித் துறைமுகமாக செயற்படுத்துவதற்கு கடந்த கோட்டாபய அரசாங்கத்தின் அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்டு, கடற்றொழில் அமைச்சின் கீழ் இத்துறைமுகம் கொண்டு வரப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து கடற்றொழில் அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா அண்மையில் இங்கு விஜயம் செய்து, இத்துறைமுகத்திற்கு அஷ்ரப் ஞாபகார்த்த மீன்பிடித் துறைமுகம் என்று பெயர் சூட்டி விட்டுச் சென்றுள்ளார். இத்துறைமுகத்திற்கு மறைந்த தலைவரான அஷ்ரபின் பெயரை சூட்டி விட்டால் பிரச்சினைகள் எல்லாம் தாமாக தீர்ந்து விடுமா? இது மக்களை ஆசுவாசப்படுத்தி, திசைதிருப்பும் சூழ்ச்சியாகவே நோக்கப்படுகிறது. இவ்வாறான மாயைகளை விடுத்து, மக்களின் பிரச்சினைகளை உள்வாங்கி தூரநோக்குடன், ஆக்கபூர்வமாக சிந்தித்து, செயற்பட அரசாங்கமும் சம்மந்தப்பட்ட அமைச்சர்களும் அவசரமாக முன்வர வேண்டும்.

வர்த்தக துறைமுகமாயினும் சரி, மீன்பிடித் துறைமுகமாயினும் சரி, இதன் அமைவிடம் துறைமுகத்திற்கு எவ்வகையிலும் பொருத்தமற்றது என்று நிரூபிக்கப்பட்டிருப்பதால், மக்களை இன்னுமின்னும் ஏமாற்றாமல் இதனை இழுத்து மூடுவது ஒன்றே தீர்வாக அமையும் என்ற யதார்த்தத்தை புரிந்து கொண்டு செயற்பட முன்வர வேண்டும். இதன் மூலம் கடலரிப்பில் இருந்து இப்பிரதேசங்களை காப்பாற்றுவதுடன் பாரம்பரியமாக முன்னெடுக்கப்பட்டு வந்த கடற்றொழிலை மீளக்கட்டியெழுப்புவதற்குமான சாதக சூழல் ஏற்படும் என்பதை குறித்த மகஜரில் சுட்டிக்காட்டியிருக்கிறோம்– என்றார்.

# விவசாய சம்மேளனத்திற்கும் அமைச்சருக்குமிடையில் முக்கிய சந்திப்பு



மட்டக்களப் மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளனம் விவசாய அமைச்சரை நேற்று (23) திகதி சந்தித்துள்ளனர். கொழும்பில் உள்ள விவசாய அமைச்சரின் அலுவலகத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது. குறித்த கலந்துரையாடலில் மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் தொடர்பில் விவசாய அமைச்சர் மகிந்த அமரவீரவுடன் கலந்துரையாடப்பட்டதாக விவசாய சங்க பிரதிநிதிகள் தெரிவித்தனர். மட்டக்களப்பு மாவட்டம் முந்தி பயிற்செய்கை பண்னும் மாவட்டமாக இருப்பதால் அதற்கு ஏற்ற வகையில் டீசலை பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவும், விவசாயிகளுக்கு இலவசமாக டீசலை வழங்குவதற்கான திட்டங்கள் தொடர்பில் கவனம் செலுத்திவருவதாகவும் அமைச்சர் இதன்போது விவசாயிகளுக்கு வாக்குறுதியளித்ததாக கலந்து கொண்ட விவசாய பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

# 6ஆவது வருடாந்த மஹோற்சவப் பெருவிழா

**க.ருத்திரன்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றான கொண்டயங்கேணி வாழைச்சேனை அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய 6 ஆவது வருடாந்த மஹோற்சவப் பெரு விழா இன்று(24) புதன்கிழமை திருக்கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. இன்று காலை கறுவாக்கேனி ஆலகண்டி சிவன் ஆலயத்தில் விசேட பூசை ஏற்பாடு செய்யப்பட்டு அங்கிருந்து பக்தர்கள் அரோகரா கோஷத்துடன் பால்குடங்களை தலையில் சுமந்தபடி பால்குடபவனியாக ஆலயத்தினை சென்று தமது நேற்றிக்கடனை செலுத்தினார்கள். தொடர்ந்து 10 நாட்க்கள் உற்சவ நிகழ்வுகள் யாவும் நடைபெற்று எதிர்வரும் 02.09.2022 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் மாலை திருவூஞ்சல் காட்சியும்,கொடியிறக்கமும் நடைபெறும். இதேவேளை இவ் ஆலயத்தில் விசேட திருவிழாக்கள் நடைபெறவுள்ளது அவையாவன 2ஆம் நாள் புஸ்பாஞ்சலி உற்சவம்,3 ஆம் நாள் வேதபராயண உற்சவம்,4 ஆம் நாள் சமங்கலி பூசை, தீபப் பூசை,5 ஆம் நாள் மாம்பழத் திருவிழா, 6 ஆம் நாள் நத்தன கணபதி உற்சவம்,7 ஆம் நாள் திருவேட்டைத் திருவிழா,8 ஆம் நாள் சப்பறத் திருவிழா, 9 ஆம் நாள் காலை சுவாமி தேரில் எழுந்தருளல், மாலை கற்பூரச் சட்டி திருவிழா 10 நாள் தீர்த்தத் திருவிழாவும் மாலை திருவூஞ்சல் காட்சியும் கொடியிறக்கமும் நடைபெற்று விழா இனிதே நிறைவு பெறவுள்ளது. திருவிழாக்கள் யாவும் ஆலய தலைவர் ஞா.பேரின்பராசா தலைமையில் ஆலய குரு கிரியாகிராம ஜோதி ஈசான சிவச்சாரியார் சிவஸ்ரீ க.மகேந்திரராஜா குருக்களின் வழிகாட்டலில் மஹோற்சவ பிரதம குரு அலங்கார பூசணம் கிரியாஜோதி ஈசான சிவாச்சாரியார் சிவஸ்ரீ.த.லிங்கேஸ்வர குருக்களினால் நடாத்தப்படும். திருவிழாக் காலங்களில் அடியார்கள் ஆலயம் வருகை தந்து வழிபட்டு திருவருள் பெறுமாறு ஆலய நிர்வாகம் அழைப்பு விடுத்துள்ளனர்.

கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய
வருடாந்த மகோற்சவம் - 2022



கல் நந்தி புல்லுண்டு
வெள்ளையரை துரத்தியடித்த
தான்தோன்றீஸ்வரர் மகிமை காண வாரீர்!
கொடியேற்றம் : 29.08.2022
தேரோட்டம் : 11.09.2022
விளம்பர அனுசரணையாளர் மு.அருட்செல்வம் (மகிழடித்தீவு)



திருக்கோணமலை வரலாற்று சிறப்பு மிக்க அருள்மிகு ஸ்ரீ லட்சுமி நாராயணப் பெருமாள் ஆலய வருடாந்த பிரமோற்சவ 3ம் நாள் திருவிழாவின் போது அனுமந்த வாகானத்தில் சுவாமி வலம் வருவதை படங்களில் கானலாம். (படங்கள் – அ . அச்சுதன்)

# குச்சவெளி மக்களுக்கு இடருதவி



( அ . அச்சுதன்)

திருகோணமலை மாவட்டம், குச்சவெளி பிரதேச வீரஞ்சேனை கிராம பிரிவில் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கும் (28) வறிய குடும்பங்களுக்குத் திருகோணமலை மாவட்ட ஊடகவியளாலர் பா.விபூஷிதன் அவர்களால் இடருதவி பெதிகள் (23) அன்று வழங்கிவைக்கப்பட்டது.

# வீட்டு நிர்மாண அங்குரார்ப்பண நிகழ்வு



ஹஸ்பர்

திருகோணமலை, தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் உள்ள சமுர்த்தி திணைக்களம் ஊடாக புதிய வீட்டு நிர்மாணத்திற்கான அடிக்கல் நடும் வைபவம் இடம் பெற்றது. தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி அவர்களின் வழிகாட்டுதளுக்கிணங்க இன்று (24) குறித்த வீட்டுத் திட்ட நிர்மாணிப்புக்கான அங்குரார்ப்பண வைபவம் இடம் பெற்றது. மீரா நகர்,சிராஜ் நகர் கிராம உத்தியோகத்தர் பிரிவில் தலா ஆறு இலட்சம் ரூபா செலவில் புதிய வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன. சமுர்த்தி விசேட வீட்டுத் திட்டத்தின் கீழ் உரிய பயனாளிகளுக்கு இது புனர் நிர்மானம் செய்து கொடுக்கப்படவுள்ளது. இதில் சமுர்த்தி தலைமை முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சித்திக், வங்கி முகாமையாளர் எம்.ஏ.ஹிஸ்புள்ளா, திட்ட உதவியாளர் எம்.ஏ.எம்.நஜீப் உட்பட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பயனாளிகள் என பலர் கலந்து கொண்டனர்.

# 100 நாட்கள் செயல்முனைவின் 24 ம் நாள் போராட்டம் வவுனியா மாவட்டத்தில்



வடமலை ராஜ்குமார்

100 நாட்கள் செயல்முனைவின் 24 ம் நாள் போராட்டம் வவுனியா மாவட்டத்தில் இன்று இடம்பெற்றது. "வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமானஉரிமைகளுடன்கூடியஅரசியல்தீர்வு வேண்டும்" எனும் 100 நாட்கள் செயல்முனைவின் 24 ம் நாள் போராட்டம் இன்று (24.08.2022) புதன் கிழமை வவுனியா மாவட்டத்தின் நெடுங்கேனி நகர் முருகன் கோயிலடிக்கு முன்பாக இடம்பெற்றது.

இப் போராட்டத்தில் நெடுங்கேணி பிரதேசத்தினைச் சேர்ந்த மக்கள்,சிவில் அமைப்பினர், பெண்கள் அமைப்பினர், கிராமிய பெண்கள் குழுக்கள், இளைஞர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர் என 200 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தங்களுக்கான சம உரிமைகள் கிடைக்கப் பெறவேண்டும் எனவும், நாங்கள் நாட்டை துண்டாடவோ தனியரசோ கேட்கவில்லை இலங்கை நாட்டிற்குள் கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வையையே கேட்கிறோம் எனக் கோரி நின்றனர். 25ம் நாள் போராட்டமானது மன்னார் மாவட்டத்தில் நாளை (25.08.2022) வியாழக் கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது .

# இலவச கருத்தரங்கு

தலவாக்கலை பி.கேதீஸ்

ஜப்பான் மற்றும் கொரிய நாடுகளில் வேலைவாய்ப்பினை பெற்றுக்கொள்வதற்கு தேவையான ஜப்பான் , கொரிய மொழியறிவு தொடர்பான தெளிவூட்டல் கருத்தரங்கு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 3ம் திகதி சனிக்கிழமை காலை 10 மணியளவில் ஹட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலைய கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. ஜப்பான்,கொரிய மொழிகளில் மிகவும் தேர்ச்சி பெற்ற வளவாளர்களால் இந்த கருத்தரங்கு நடாத்தப்படுகின்றது. இந்த பாடநெறியானது பகுதி நேர கற்கை நெறியாக எதிர்வரும் நாட்களில் ஹட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெற உள்ளது.பயிற்சி நெறி கட்டணங்கள் மற்றும் மேலதிக விபரங்களுக்கு வதிவிட முகாமையாளர்,ஹட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையம் 0512222762ஃ 0512223492 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தின் வதிவிட முகாமையாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# தென்கிழக்கு பல்கலையில் 2 வது சர்வதேச ஆய்வரங்கு



நூருல் /ஹுதா உமர்

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தில் "தொழில்நுட்ப மாற்றத்தின் மூலம் நிலையான எதிர்காலத்தை உருவாக்குதல்" எனும் தொனிப்பொருளில் அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்திற்கான 2 வது சர்வதேச ஆய்வரங்கு (ஐஊளுவு 2022), தொழில்நுட்ப பீட கேட்போர் கூடத்தில் இன்று (24) நிகழ்வின் இணைப்பாளர் ஆர்.கே.ஏ.ஆர். காரியப்பரின் வழிகாட்டலில் பீடாதிபதி கலாநிதி யூ.எல்.அப்துல் மஜீட் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வுக்கு பிரதம அதிதியாக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றியதுடன் குறித்த 2 வது சர்வதேச ஆய்வரங்கின் பிரதான உரையை தென்கிழக்குப்பல்கலைக் கழகத்தின் முன்னாள் உபவேந்தரும், களனி பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியருமான எம்.எம்.எம். நாஜீம் நிகழ்த்தினார். அத்துடன் நிகழ்வில் விருந்தினருக்கான உரையை கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் கே.பீ. ஹேவா கமகே அவர்கள் நிகழ்த்தினார்.

இணையத்தினூடாகவும் நேரலையாகவும் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாச்சார பீடத்தில் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில், உயிர் முறைமைப் பிரிவின் தலைவர் கலாநிதி முனீப்.எம்.முஸ்தபா, தகவல் தொழிநுட்ப பிரிவின் தலைவர் கே.முகம்மட் நிகப்த்தி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். இந்த ஆய்வரங்கில் 38 ஆய்வுக் கட்டுரைகள் முன்னிலைப்படுத்தப்பட்டு விவாதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# இல்மனைற் மணல் அகழ்வுக்கு எதிரான போராட்டம்




( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் தீவு மக்களுக்கு நிம்மதி பறிபோகிறது . காற்றாடிக் காம்பு கழுத்தை அறுக்கும் அபாயம் தோன்றியுள்ளது என்ற தொணிப்பொருளில் மீண்டும் தலைதூக்கும் இரண்டாம் காற்றாலைத் திட்டத்தால் மன்னார்த் தீவு பாலைவனமாகும் என எச்சரிக்கையாக அமைவதுடன் ஏற்கனவே அமைக்கப்பட்ட காற்றாடிகள் எழுப்பும் சத்தத்தால் மக்கள் குடியெழுப்பி அவதி நிலவும்போது இன்னும் பல காற்றாடிகளை ஊரின் அருகாமையில் நிறுவ முயலும் அரசு இடைவெளியில்லாமல் சதா மக்களின் காதுக்கள் இரைச்சல் நிலைக்கப்போகிறது எனவும்
மன்னார்த் தீவின் குடியிருப்புநிலம் சுருங்கப்போகிறது பசுமை காடுகள் அழியப் போகின்ற. சிரேங்காரப் பறவையினம் எங்கோ தொலைவில் தொலையப் போகின்றது. கடல் வளம் துடைத்தெறியப்படப் போகிறது மண்ணகழ்வு தலைதூக்கி மன்னார் தீவின் நிலப்பரப்பு கபளீகரம் செய்யப்படுகின்றது காடுகள் அழிக்கப்படுவதால் மண்ணரிப்பு நிகழ்ந்து கடல் நீர் கரை நோக்கி நகர்ந்து குடியிருப்பை அழிக்கப்போகிறது

ஆகவே மன்னார் தீவில் கரையோரமாக அமைக்கப்படும் காற்றாலைகளுக்கும் மற்றும் இல்மன்னற் மணல் அகழ்வுக்கு எதிர்ப்பு தெரிவித்து பேசாலை மற்றும் அயல் கிராம மக்கள் யாவரும் ஒன்றிணைந்து புதன் கிழமை (24.08.2022) காலை 8 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை பேசாலையில் மாபெரும் கவனயீர்ப்பு போராட்டத்தையும் அத்துடன் பேரணியும் நடாத்தினர். இந்த நாளில் பேசாலை பகுதியில் சகல வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டதுடன் தனியார் போக்கவரத்து சேவைகளும் நிறுத்தப்பட்டு மாணவர்கள் பாடசாலைகளை பகிஷ்கரித்த நிலையில் மீனவர்களும் கடற்தொழிலுக்கு செல்லாது இயல்பு நிலை பாதிப்டைந்திருந்தது. பல நூற்றுக்கணக்கான சிறுவர் தொடக்கம் பெரியோர் வரையிலான மக்கள் கலந்து கொண்ட இவ் போராட்டத்தில் மன்னார் பிரதேச சபை தவிசாளரிடம் மகஜர் கையளிக்கச் சென்றபோது தவிசாளர் இல்லாமையால் உப தவிசாளரிடம் சிறுவன் ஒருவரால் மகஜர் கையளிக்கப்பட்டது.

# வாகரை புனித பேதுருவானவர் ஆலயத்தின் 112 வது வருடாந்த திருவிழா



மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் புகழ்பூத்த மகிமைமிகு கத்தோலிக்க ஆலயங்களுள் ஒன்றாக திகழ்ந்துவரும் வாகரை புனித பேதுருவானவர் ஆலயத்தின் 112 வது வருடாந்த திருவிழா கொடியிறக்கத்துடன் நிறைவுபெற்றுள்ளது. கடந்த 17.08.2022 திகதி பங்குத்தந்தை ஜென்சன்லோய்ட் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பிக்கப்பட்ட ஆலய வருடாந்த திருவிழாவில் நவநாட்கால திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்பட்டு, கடந்த 21.08.2022 திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு மறைமாவட்ட ஆயர் அதிவந்தனைக்குரிய கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகை தலைமையில் திருவிழா கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, கொடியிறக்கத்துடன் ஆலய திருவிழா இனிதே நிறைவுபெற்றுள்ளது.

# கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக கொஸ்டா நியமனம்



**(பழுலுல்லாஹ் பர்ஹான்)**

கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் புதிய பணிப்பாளராக வைத்திய கலாநிதி டி.ஜி.எம். கொஸ்டா நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கான நியமனக் கடிதத்தை கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி. ஜே.ஜே. முரளிதரன் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சில் வைத்து இன்று 24 புதன்கிழமை உத்தியோகபூர்வமாக வழங்கி வைத்தார்.

அத்தோடு முன்னாள் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக கடமையாற்றி கொழும்பு தேசியகண்வைத்தியசாலையின்புதியபணிப்பாளராக நியமனம் பெற்று இடமாற்றம் செல்லும் வைத்திய கலாநிதி ஏ.ஆர்.எம். தௌபீக்குக்கான விடுவித்தல் கடிதத்தையும் இதன் போது மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி. ஜே.ஜே.முரளிதரன் வழங்கி வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வாழ்வின் சக்தி செயற்திட்டம் மட்டக்களப்பிலும் முன்னெடுப்பு




**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

வாழ்வின் சக்தி செயற்திட்டத்தின் மூலம் மட்டக்களப்பு மாவட்டத்தின் சில பகுதிகளில் இன்று உலர் உணவுப்பொதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள மக்களை இனங்கண்டு அவர்களுக்கான அத்தியாவசியமான பொருட்களை வழங்குவதே வாழ்வின்சக்திசெயற்திட்டத்தின்நோக்கமாகும்.அதன் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் வழிகாட்டல்களுக்கு அமைவாக பிரதேச செயலாளர்களின் ஒழுங்குபடுத்தலில் வாழ்வின் சக்தி திட்டம் இன்று (24) திகதி மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டது.

LOLC குழுமம் இந்த திட்டத்துடன் கைகோர்த்துள்ளதுடன், மட்டக்களப்பு மாவட்டத்தின் செங்கலடி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட புலையவெளி, பன்குடாவெளி தளவாய் மற்றும் கிரான் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பறங்கியாமடு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்பங்களிற்கு 600 உலர் உணவுப்பொருட்கள் அடங்கிய பொதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், LOLC குழுமத்தின் கிழக்கு பிராந்திய குழும தலைவர் சுமன், பிரதேச முகாமையாளர், உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் இன்று முன்னெடுக்கப்பட்ட வாழ்வின் சக்தி திட்டத்தில் பங்கேற்று மக்களுக்கான உலர் உணவுப்பொருட்களை பகிர்ந்தளித்திருந்தனர்.

# மக்களின் பல பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு



**பைஷல் இஸ்மாயில் -**

அம்பாறை மாவட்ட மக்களின் பிரச்சனைகளை கேட்டறிந்து அதற்கான தீர்வுகளை பெற்றுக்கொடுக்கும் பொதுமக்கள் சந்திப்பு இன்று (24) அம்பாறை மாவட்ட கிழக்கு மாகாண ஆளுநர் காரியாலயத்தில் இடம்பெற்றது. அம்பாறை மாவட்டத்தின் பல பிரதேசங்களில் இருந்து வருகை தந்த பொதுமக்கள் தங்களின் பிரச்சினைகள் தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யம்பதிடம் முன்வைத்திருந்தர். இதன்போது, சில பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட்ட அதேவேளை, ஏனைய பிரச்சினைகளுக்கான தீர்வுகளை பெற்றுக்கொடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்தல் வழங்கி அதுதொடர்பிலான நடவடிக்கையினை எடுக்குமாறு கிழக்கு மாகாண ஆளுநர் செயலாளருக்கு பணிப்புரை வழங்கி வைத்தார். இன்றைய தினம் நூற்றுக்கு மேற்பட்ட பொதுமக்களின் பிரச்சினைகளை ஆளுநர் அனுராதா யஹம்பத்தினால் தீர்த்து வைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.




# அறுவடை நிகழ்வு



தேசிய உணவு உற்பத்தி வேலைத்திட்டத்தின் கீழ் உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்குடன் மட்டக்களப்புமாவட்ட அரசாங்கஅதிபர் கே.கருணாகரன் அவர்களது ஆலோசனை மற்றும் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அதிகமான அரச அலுவலகங்களில முன்னுதாரன செயற்பாடாக அலுவலக வளாகங்களில் உணவுப்பயிர் செய்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதற்கமைவாக மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வீ.வாசுதேவன் அவர்களது அறிவுறுத்தல்களுக்கு அமைவாக பிரதேச செயலக வளாகத்தின் சுற்றுப்புற சூழலில் இயற்கையான முறையில் உணவுப் பயிர் செய்கைகள் கடந்த சில மாதங்களாக முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் அதன் ஒரு பகுதியாக முன்னெடுக்கப்பட்ட மஞ்சள் நேற்று(23) திகதி பிரதேச செயலாளரின் ஆலோசனைக்கு அமைவாக அறுவடை நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு பயிர்செய்யப்பட்ட உற்பத்தி நடவடிக்கையானது எந்தவித இரசாயனமும் இன்றி முழுவதுமாக சேதனப் பசளை முறையைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டதென்பதும் குறிப்பிடத்தக்கது. அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் தேசிய உணவு உற்பத்தி வேலைத்திட்டத்திற்கு அரச உத்தியோகத்தர்களின் பங்களிப்பை முன்மாதிரியாக எடுத்துக்காட்டுமுகமாகவே குறித்த பிரதேச செயலக வளாகத்தில் இயற்கை விவசாய செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந் நிகழ்வில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு அறுவடையில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் இரண்டாம் கட்ட வறுமை ஒழிப்புத்திட்டம்



**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

இலங்கை அரசின் அங்கீகாரத்தில் உலக உணவுத்திட்டத்தின்கீழ் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான வறுமை ஒழிப்புத்திட்டத்தின் இரண்டாம் கட்ட நடவடிக்கைகள் அமுலாகின்றன. இதற்கமைவாக இம்மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள வறுமை ஒழிப்புத் திட்ட நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயும் விசேட கூட்டம் உலக உணவுத் திட்டத்தின் இலங்கை நாட்டிற்கான பணிப்பாளர் அப்துர் றஹீம் சித்தீக்கியின் பங்குபற்றுதலுடன் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி ஸ்ரீகாந் தலைமையில் இன்று (24) மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

தென்கொரியா நாட்டின் 16 மில்லியன் அமேரிக்க டொலர் நிதிப்பங்களிப்புடன் மேற்கொள்ளப்படும் இத்திட்டம் நாட்டின் மட்டக்களப்பு, மொணராகல, மாத்தளை, மன்னார், முல்லைத்தீவு ஆகிய ஐந்து மாவட்டங்களில் அமுல்படுத்தப்படுகின்றன. தற்பொழுது மேற்கொள்ளப்படும் இரண்டாங்கட்ட திட்டத்தில் பெருமளவு போசாக்கான உணவு வழங்கும் திட்டங்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக இக்கலந்துரையாடலில் கடந்த பெரும்போகம் மற்றும் சிறுபோக வேளான்மை செய்கையின் அறுவடையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டது. இத்திட்டத்தினூடாக இம்மாவட்டத்தின் விவசாயக் கிணறுகள் திருத்தம், சிறு குழங்கள் திருத்தம், கோழி வளர்ப்பு, வீட்டுத்தோட்டம், வாய்காகல் துப்பரவு செய்தல், நெசவு தொழில் பயிற்சி, விவசாய உள்ளீடுகள் வழங்கள், ஆடு வளர்ப்பு, சிறிய அளவிலான பால்உற்பத்தி, உற்பட வாழ்வாதார செயற்றிட்டங்களுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன்.

இவ்வாண்டு இத்திட்டத்தினூடாக 22.67 மில்லியன் செலவில் 14 குழங்கள் திருத்தம் செய்யப்பட்டு விவசாயத்திற்குத் தேவையான நீர்ப்பாசனம் வழங்கப்பட்டுள்ளதுடன் இதுவரை இத்திட்டத்தினூடாக 99.33 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளன. 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டுவரையான இத்திட்டம் இவ்வாண்டு டிசம்பர் மாதத்துடன் நிறைவடையவுள்ளது. இக்கூட்டத்தின்போது உலகஉணவுத் திட்டத்தின் அரசபங்காளி இணைப்பு உத்தியோகத்தர் முஸ்தபா நிஹ்மத் தலைமையிலான அதிகாரிகளும், மாவட்ட செயலகபிரதம கணக்காளர் திருமதி. இந்திரா மோகன், மாவட்டதிட்டமிடல் பணிப்பாளர் சசிகலா புண்ணியமூர்த்தி, வவுணதீவு பிரதேசசெயலாளர் எஸ். சுதாகரன், கமநலசேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் கே. ஜெகநாத், விவசாய விரிவாக்கல் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் வீ.பேரின்பராசா, உதவிதிட்டமிடல் பணிப்பாளர் ஆர். ஜதீஸ்குமார் உட்பட பலதிணைக்களங்களின் அதிகாரிகளும் பிரசன்னமாயிருந்தனர்.

# நிந்தவூர் கடலரிப்பை வைத்து அரசியல் செய்யாதீர்கள் தடுக்க முடியா விட்டால் இராஜினாமா செய்யுங்கள்

**(அஸ்லம் எஸ்.மௌலானா)**

நிந்தவூர் கடலரிப்பை தடுத்து நிறுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். வெற்று அறிக்கைகளை வெளியிட்டு மக்களை ஏமாற்றாதீர்கள். உங்களால் முடியா விட்டால் இராஜினாமா செய்யுங்கள். இக்கடலரிப்பை வைத்து அரசியல் செய்யாதீர்கள் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிப் பொருளாளர் ஏ.சி.யஹியாகான், அம்பாரை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களிடம் வேண்டுகோள் இது தொடர்பாக அவர் இன்று (24) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது அம்பாரை மாவட்ட கரையோரப் பகுதி எங்குமே இந்த கடலரிப்பு பிரச்சினை ஏற்பட்ட வண்ணமே உள்ளது. நீண்ட காலமாக நிலவும் இந்த பிரச்சினைக்கு இதுவரை தீர்வு எட்டப்படவில்லை. கடலரிப்பு உச்சம் தொடும்போது மட்டும் அறிக்கைகள் விடுவதும் அவர் இவருடன் பேசினோம் என்று செய்தி வெளியிடுவதும் எமது பாராளுமன்ற உறுப்பினர்க வழக்கமாகிப் போய்விட்டது. கட்சி பேதங்களைத் துறந்து அம்பாரை மாவட்ட அனைத்து எம்.பி.க்களும் ஒன்றுபட்டு தீர்க்கமான நிரந்தர முடிவை எடுங்கள். ஜனாதிபதியை சந்தித்து, உடன் நடவடிக்கை எடுங்கள். இப்பிரச்சினைகளுக்கு நிரந்தரமாக தீர்வை காணுங்கள். உங்களால் முடியா விட்டால் எம்.பி பதவிகளைத் துறந்து வீடு செல்லுங்கள். இந்த கடமையை நாங்கள் பொறுப்பேற்கிறோம். அம்பாரை மாவட்ட கரையோரப் பகுதிகளில் அனைத்து அபிவிருத்தி திட்டங்களும் அரைகுறையாகவே நடந்துள்ளன. எந்தவொரு திட்டமும் பூர்த்தியடைந்ததாக இல்லை. அவ்வாறுதான் இந்த கடலரிப்பு விவகாரமும் நகர்த்தப்படுகிறது– என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# கால் புதையும் மண்ணில்

# சிற்கள் புதைந்து செல்லும்

# தேரோட்டம்

## 2022.09.11

## காண வாரீர்!




"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமுகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206

# வலிந்துதவு சமூக சேவை அமைப்புக்களின் வருடாந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்



**- யூ.கே. காலித்தீன் -**

சாய்ந்தமருது பிரதேச செயலகத்திற்குட்பட்ட வலிந்துதவும் சமூக சேவை அமைப்புகளின் வருடாந்த ஒன்றுகூடல் சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் பிரதேச செயலாளர் எம். எம். ஆசிக் தலைமையில் இன்று நடைபெற்றது. சமூக சேவை உத்தியோகத்தர் ஏ. அஹமட் சபீரின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற நிகழ்வானது எமது நாடும் பிரதேசமும் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி, தலை விரித்தாடும் போதைவஸ்த்து போன்றவற்றுக்கு நாம் எவ்வாறு முகம் கொடுப்பது தொடர்பாக சிறந்த கருத்துக்களை தெரிவித்த பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் தனதுரையின் போது இளைஞர்கள், மாணவர்கள் போதைவஸ்த்துக்கு அடிமையாக்கப்பட்டு மிக மோசமாக தலைவிரித்தாடுகின்ற போதிலும் அதனை ஓரளவேணும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தாலும் முற்றாக தடை செய்வதில் பல சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதெனவும், பாவனையில் இல்லாத சில அரச காணிகளை ஆக்கிரமிப்பு செய்வதிலும் சிலர் முட்பட்டாலும் அதனை முடிவுக்கு கொண்டுவருவதில் நீதிமன்றத்தை நாடி தீர்வினை பெற்றோம் எனவும் கூறினார்.

இன்று கூடியிருக்கும் நாம் அனைவரும் முஹல்லா ரீதியாக ஒருமித்து செயற்படுவோமாக இருந்தால் மேற்கூறிய பிரச்சினைகளை எமது பிரதேசத்தினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரலாம் எனவும் அவரது தலைமை உரையின் போது தெரிவித்தார்.

சமூகத்தின் எதிர்கால செயற்திட்டம் தொடர்பாக பின்வரும் செயற்பாடுகளை மேற்கொள்வது எனவும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. முதியோர் நலத்திட்டங்கள், சிறுவர் நலத்திட்டங்கள், போதைவஸ்த்து பாவனை தொடர்பான விளிப்புணர்வு, போதைவஸ்த்துக்கு அடிமைப்பட்டவர்களுக்கான புணர்வாழ்வளித்தல், பெண் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கான நலத்திட்டங்கள், விஷேட தேவையுடைய பயனாளிகளுக்கான நலத்திட்டங்கள், பாடசாலை இடைவிலகள் மாணவர்களை நெறிப்படுத்தலும் அவர்களுக்கான நலத்திட்டங்கள் போன்ற செயற்பாடுகளை எதிர்காலத்தில் செயற்படுத்துவது எனவும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

அத்தோடு எதிர்காலத்தில் இதற்கான சம்மேளனத்தை உருவாக்கி ஒழுக்க விழுமியமுள்ள சமூகத்தை கட்டியெழுப்பும் நோக்கோடு பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவராக அல்ஹாஜ் ஏ.எல்.ஏ. பரீட், செயலாளராக எல்.நாசர், பொருளாலராக ரியாத் ஏ. மஜீட், உப தலைவராக எம்.எம். உதுமாலெவ்வை, உப செயலாளராக ஏ.எம்.எம். டில்சாத், நிர்வாக உறுப்பினர்களாக யூ.கே. காலித்தீன், எம்.என்.எம். சஜா, ஏ.சி. முஹம்மட், ஏ.சி.எம். பழில், பி.எம். றியாத் உம்.எம்.ஜே. முபாறக் மற்றும் யூ. றைஸ்சுடீன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

# மன்னார் தீவு தொடர்பான ஆலோசனைக் கூட்டம்



**( வாஸ் கூஞ்ஞ)**

மன்னார் தீவில் முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மற்றும் கனியவள மணல் அகழ்வால் மன்னார் தீவு விரைவில் அழிவுக்கு உள்ளாகும் அபாய நிலை தோன்றி வருவதால் இவற்றை தடுத்து நிறுத்தும் நோக்குடன் மன்னார் பிரஜைகள் குழுவின் எற்பாட்டில் மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஆலோசனைக் கூட்டம் செவ்வாய் கிழமை (23.08.2022) மன்னார் பிரஜைகள் குழுவின் அலுவலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. பிரஜைகள் குழுத் தலைவர் அருட்பணி அ.ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில் நடைபெற்றக் இவ் கூட்டத்தில் பல அமைப்புக்களின் பிரதிநிதிகளும் மதத் தலைர்களும் புத்தி ஜீவிகளும் கலந்து கொண்டனர்.

# மின்னொளி விளையாட்டுக்குத் தடை



**(அஸ்லம் எஸ். மௌலானா)**

மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டரங்கில் மின்னொளி விளையாட்டுப் போட்டிகளைத் தடை செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தெரிவித்துள்ளார். மருதமுனையிலுள்ள பல சமூக சேவை அமைப்புகள் விடுத்த வேண்டுகோளுக்கமைவாக இத்தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டரங்கில் இடம்பெறுகின்ற மின்னொளி விளையாட்டுப் போட்டிகளால் இரவு நேரங்களில் இப்பிரதேச இளைஞர்கள் மற்றும் மாணவர்களில் சிலர் போதைப்பொருள் பாவனையில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகள் அதிகரித்து காணப்படுவதாகவும் ஒழுக்க நெறிமுறை, கட்டுக்கோப்பு சீர்குலைந்து வருவதாகவும் வணக்க வழிபாடுகளில் பாதிப்பு ஏற்படுவதாகவும் மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளில் கவனம் செலுத்துவது குறைவடைந்து செல்வதாகவும் எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது.

அத்துடன் ஜீ.சி.ஈ உயர்தரப் பரீட்சைக்கான காலம் நெருங்கி வருகிறது. நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் மின்சார நெருக்கடிக்கு மத்தியில் மின்னொளி விளையாட்டுக்கள் மேலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இவ்வாறான காரணங்களை மையப்படுத்தி மின்னொளி விளையாட்டுப் போட்டிகளை உடனடியாகத் தடை செய்யுமாறு பொது அமைப்புகள் தன்னிடம் கோரிக்கை விடுத்து வருகின்றன. இதையடுத்தே கல்முனை மாநகர சபை நிர்வாகத்தின் கீழுள்ள மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டரங்கில் ஊர், சமூக நலன் கருதி, மறு அறிவித்தல் வரை மின்னொளி விளையாட்டுப் போட்டிகளுக்கு அனுமதி வழங்குவதில்லை என்ற தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# ஐஸ் போதைப்பொருளுடன் குடும்பஸ்தர் கைது



**பாறுக் ஷிஹான்**

ஐஸ் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த சந்தேக நபரை கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர். அம்பாறை மாவட்டம் கல்முனை விசேட அதிரடிப்படை முகாமிற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றினை அடுத்து செவ்வாய்க்கிழமை(23) இரவு காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கர்பலா வீதி அலியார் சந்தியில் வைத்து சந்தேக நபர் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட தேடுதலில் கைதானார். இவ்வாறு கைதான நபர் 37 வயது மதிக்கத்தக்கவர் என்பதுடன் சந்தேக நபர் வசம் இருந்து ஐஸ் போதைப்பொருள் 5 கிராம் 10 மில்லிகிராம் விசேட அதிரடிப்படையினரால் கைப்பறறப்பட்டுள்ளது. இச்சோதனை நடவடிக்கையின் போது விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கமைய அம்பாறை வலயக் கட்டளை அதிகாரி சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சில்வெஸ்டர் விஜேசிங்கவின் அறிவுறுத்தலுக்கமைய மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் டி.சி வேவிடவிதான ஆகியோரின் வழிகாட்டலில் கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பதில் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் எஸ்.எம். பி.பி.எம் டயஸ் தலைமையிலான உப பொலிஸ் பரிசோதகர்களான எச்.ஜி.பி.கே நிஸ்ஸங்க உள்ளிட்ட பொலிஸ் சார்ஜன்ட்களான பண்டார (13443) வீரகோன் (33354) பொலிஸ் கன்ஸ்டபிள்களான நிமேஸ்(90699)பியுமக (94143) சாரதி ஜெயரட்ன (19786) அதிகாரிகள் இந்நடவடிக்கையை முன்னெடுத்து சந்தேக நபரை கைது செய்தனர்.

பின்னர் கைது செய்யப்பட்ட நபர் சான்று பொருட்களுடன் பொலிஸாரிடம் விசேட அதிரடிப்படையினர் நீதிமன்ற நடவடிக்கைக்காக பாரப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனை பள்ளிவாசலில் இரத்ததான முகாம்




**(நூருல் /ஹுதா உமர்)**

கல்முனை /ஹுதா ஜு/ம்ஆ பள்ளிவாசல் வழிகாட்டலில் தஃவாக்குழுவின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் எதிர்வரும் 28.08.2022ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 08.30 மணிக்கு கல்முனை /ஹுதா ஜு/ம்ஆ பள்ளிவாசலில் பள்ளிவாசல் தலைவர் ஏ.வி.எம். இப்றாஹீம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள இரத்தத் தட்டுப்பாட்டினை நிவர்த்திக்கும் பொருட்டே நிர்வாகத்தினர் மற்றும் தஃவாக் குழுவினரின் முழுமையான பங்களிப்புடன் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்விரத்ததான முகாமின் ஆரம்ப நிகழ்விற்கு கல்முனை தலைமையக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர், கல்முனை இராணுவ படை முகாம் 18வது விஜயபாகு பாபல ரஜிமேந்து அதிகாரி கொமாண்டர் எஸ். ஆர்.கே.டி.சிறிசேன மற்றும் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் வைத்திய அத்தியேட்சகர் ஏ.எல்.எப்.றஹ்மான் உட்பட உலமாக்கள் பலரும் கலந்து கொள்ள அழைப்பு விடுக்கப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்விரத்ததான முகாமில் கல்முனை வாழ் ஆண்கள், பெண்கள், இளைஞர்கள், விளையாட்டுக்கழகங்களின் உறுப்பினர்கள், பொது அமைப்புக்கள், பொதுமக்கள் என அனைவரும் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்க முன்வர வேண்டுமென ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுப்பதோடு, மேலதிக விபரங்களைப்பெற தஃவாக்குழுவினரின் 0760123242, 0771336317 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தங்களின் பெயர் விபரங்களை வழங்க முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அண்ணாவியார் வீர.இராசமாணிக்கம்
## உடலுக்கு பாராளுமன்ற உறுப்பினர்களும் அஞ்சலி



**(எருவில் துசி)**

எருவிலை சேர்ந்த அண்ணாவியார் வீர.இராசமாணிக்கம் அவர்கள் 22.03.2022 நேற்று காலமானார். இவர் இலங்கை தமிழ் அரசு கட்சியில் ஆரம்ப காலம் தொட்டு செயற்பட்டவர் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியை இன்று(23) நடைபெற்றது. இதன் போது இலங்கை தமிழ் அரசு கட்சியின் கொடி போர்த்தி அஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்வில் முன்னாள் பா.உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், ஞா.சிறிநேசன் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் நடராசா மற்றும் மட் மாநகர முதல்வர் தி.சரவணபவன் வட்டார பிரதேச சபை உறுப்பினர் சி.காண்டீபன் எருவில் கிளை உறுப்பினர்கள் கட்சி ஆதரவாளர்கள் என பலர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

# திருமலையில் மூன்று நாட்களுக்கு நீர் விநியோக தடை

**ரவ்பீக் பாயிஸ்**

திருகோணமலையில் மூன்று நாட்களுக்கு குடிநீர் விநியோகம் தடைப்படுவதாக தேசிய நீர் வழங்கள் வடிகால் அமைப்பு சபை அறிவித்துள்ளது. அதன்படி எதிர்வரும் 25,26 மற்றும் 27 ஆம் திகதிகளில் திருகோணமலை பிரதேசத்தில் குறித்த நீர் வெட்டு அமுல்படுத்தப்படுவதாக தேசிய நீர் வழங்கள் வடிகால் அமைப்பு சபை அறிவித்துள்ளது. கந்தளாய் பிரதேசத்தில் அமைந்துள்ள நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் பராமரிப்பு பணிகள் காரணமாகவே குறித்த மூன்று நாட்களுக்கான நீர் வெட்டு அமல்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய நீர் வழங்கள் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது. எவ்வாறாயினும் இரவு வேலைகளில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நீர் விநியோகம் வினியோகிக்கப்பட உள்ளதாகவும் பொதுமக்கள் நீரினை சிக்கனமாக பயன்படுத்துமாறும் தேசிய நீர் வழங்கள் மற்றும் வடிகாலமைப்பு சபை கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




